**துணை ஆணையர் (வவ),(முகூபொ)சரகம் -3, சென்னை -6அவர்களின் செயல்முறைகள்.**
**முன்னிலை - திரு. ஆ.நா.வீரேசலிங்கம்,பி.ஏ.,எம்.காம்.,பி.எல்.,எம்.பி.ஏ.,**
**இடம்- எண் 1. கிரீம்ஸ் சாலை, வணிகவரி கட்டிடம். சென்னை-6.**

ந.க. 441 /2017/அ 1

**நாள்- 21 . 07. 2017**

பொருள் பொதுப்பணிகள் - துணை ஆணையர் (வவ) சரகம் -2 , சென்னை -6 தட்டச்சர் பணி - அரசு பணியாளர் தேர்வாணையம் தொகுதி IV 2013 - 2014 மற்றும் 2014-15 -ல் நியமனம் செய்யப்பட்டு பணியில் சேர்ந்த தட்டச்சர்கள் - பணி வரன்முறை செய்தல் - ஆணை பிறப்பித்தல் - தொடர்பாக.

பார்வை
1. செயலாளர் / தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம், சென்னை 3 க.எண் 967 / PSD - A / 2016 நாள். 03.02.2016.
2. இணை ஆணையர் (வவ), சென்னை (தெற்கு) கோட்டம், சென்னை - 6 அவர்களின் க. எண். 791 /2016 / அ2-I நாள். 03.03.2016.
3. இணை ஆணையர் (வவ), சென்னை (வடக்கு),செயல்முறை ஆணை நக. எண். 1327 / 2016 / அ1, நாள். 18.03.2016.
4. துணை ஆணையர் (வவ), சரகம் - 2, சென்னை - 6, செயல்முறை ஆணை நக. 441 / 2016 / அ1, நாள். 19.05.2016.
5. அரசு ஆணை எண் 130, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத்துறை நாள். 22.07.2008.
6. அரசு ஆணை எண். 43, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை நாள். 17.04.2009.

-------------

**ஆணை-**

பார்வை 1-ல் காணும் கடிதத்தின்படி தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் 2013 - 2014 மற்றும் 2014-15-ஆம் ஆண்டு தொகுதி IV தேர்வின் மூலம் தேர்வு செய்யப்பட்டு பார்வை - 3-ல் காணும் செயல்முறை ஆணையின்படி இணை ஆணையர் (வவ), சென்னை (வடக்கு) கோட்டம் அவர்கள் இச்சரகத்திற்கு பணி நியமன ஆணையின் பொருட்டு ஒதுக்கீடு செய்யப்பட்டு பார்வை 4- ல் காணும் இவ்வலுவலக ஆணையின்படி கீழ்கண்ட தட்டச்சர் பணி நியமனம் செய்யப்பட்டார். பார்வை 6-ல் காணும் இணை ஆணையர் (வவ), சென்னை (வடக்கு) கோட்டம் அவர்களின் கடிதத்தில் அறிவுறுத்தியவாறு தனியாளரின் பணியினை வணிகவரித்துறையில் அவர் பணியில் சேர்ந்த நாளிலிருந்து தட்டச்சர் பணித்தரத்தில் பணிவரன்முறை செய்து அன்றைய தினம் முதல் தனியாளருக்கு தகுதிகாண் பருவம் தொடங்கியதாகவும் இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

..2..

| வ.எண் | பெயர் / பதவி திருவாளர்கள் | தற்போது பணிபுரியும் அலுவலகம் | பணியில் சேர்ந்த நாள் | பணிவரன்முறை செய்யப்பட்ட நாள் |
|---|---|---|---|---|
| 1. | திரு.ஜா.விமல்குமார், தட்டச்சர் | உதவி ஆணையர் (வவ), வள்ளலார் நகர் வரிவிதிப்பு வட்டம். | 26.05.2016 மு.ப. | 26.05.2016 மு.ப. |

2.தமிழ்நாடு அமைச்சுப்பணி சிறப்பு விதிகளில் விதி 34(a) மற்றும் அதனுடன் கூடிய பிற்சேர்க்கை ஐந்தில் குறிப்பிட்டுள்ளபடி, தட்டச்சர் தகுதிகாண் பருவத்தினை மூன்றாண்டு காலத்திற்குள் இரண்டாண்டு காலத்தினை திருப்திகரமாக நிறைவு செய்ய வேண்டும் என ஆணையிடப்படுகிறது.

3. மேலும் தகுதிகாண் பருவ காலத்திற்குள் தமிழ்நாடு அலுவலக நடைமுறை நூல் (Tamil Nadu Government Office Manual) பார்வை 5 மற்றும் 6-ல் காணும் அரசாணையில் குறிப்பிட்டுள்ளபடி,தமிழ்நாடு தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தால் நடத்தப்பெறும் தொழில் நுட்பத் தேர்வான கணினிவழி அலுவலக தன்னியக்க முறை (Computer on Office Automation) ஆகிய தேர்வுகளில் தேர்ச்சிப் பெறுதல் வேண்டும். மேலும் தகுதி காண் பருவ காலத்தில் பணி மன நிறைவு தரும் வகையில் அமைதல் மிகுவம் அவசியம் எனவும் அறிவுறுத்தப்படுகிறது.

பணிவரன்முறை - தொகுதி IV - 2013 - 2014 வரையிலான காலத்தில் உள்ள பணிநியமனங்கள் தொடர்பாக சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் நிலுவையிலுள்ள மேல் முறையீட்டு வழக்குகளின் தீர்ப்புக்கு உட்பட்டது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

ஒம்/- ஆ.நா.வீரேசலிங்கம்,
துணை ஆணையர் (வவ)(முகூபொ),
சரகம் - 2.

பெறுநர்

திரு.ஜா.விமல்குமார், தட்டச்சர்.
( உதவி ஆணையர் (வவ), வள்ளலார் நகர் வரிவிதிப்பு வட்டம்.
அவர்களின் மூலமாக)

**நகல் - (தகவலுக்காக)**

1. செயலாளர், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம், சென்னை - 6.
2. இணை ஆணையர் (வவ), சென்னை (வடக்கு) கோட்டம், சென்னை - 6.
3. இணை ஆணையர் (வ), சென்னை (தெற்கு) கோட்டம், சென்னை - 6
4.உதவி ஆணையர் (வவ) வள்ளலார் நகர் வரிவிதிப்பு வட்டம். சென்னை - 1.
5.உபரி - 2

// உண்மை நகல் / உத்தரவின்படி //

25/7/17
வணிக வரி அலுவலர்/மேலாளர்.

2/9/2022

Assistant Commissioner (ST)
Tondiarpet Assessment Circle
Chennai-600 003.